சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

முன்னிலை: **திருமதி.P மோகனவள்ளி, B.A., M.L.,**

சார்பு நீதிபதி பொள்ளாச்சி

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் வியாழக்கிழமை

(2055 திருவள்ளுவராண்டு குரோதி வருடம் புரட்டாசி திங்கள் 31 ம் நாள்)

இடை மனு எண்.1/2024

-in-

அசல் வழக்கு எண். 32/2024

C.S. காளியப்பன் ....மனுதாரர்/ வாதி

/எதிராக/

G.உதயகுமார் ....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது, கடந்த 17.10.2024 ஆம் தேதியன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது, மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.T.மனோகர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.R.சேனாதிபதி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உ த் த ர வு

1) இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் வகுமுறை 38 விதி 5ன் கீழ் மனுதாரர், எதிர்மனுதாரருக்கு தக்க ஜாமீன் உடனடியாக ஒப்படைக்கும் படியும் இல்லாவிடில் மனுச்சொத்தினை மேற்படி அசல் வழக்கின் தீப்புக்கு முன் ஜப்தி செய்து உத்தரவிட்டும் இம்மனுவின் விசாரணை முடியும் வரை இடைக்கால முன் ஜப்தி செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனு பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம்</u> :-

மனுதார் அசல் வழக்கில் இடைக்கால முன் ஜப்தி செய்ய பரிகாரம் கோரி எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் கடந்த 20.02.2022 ம் தேதி மனுதாரரிடம் கடனாக ரொக்கம் ரூ.5,50,000/-ஐ பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 1 க்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி சேர்த்து தருவதாகவும் உறுதியளித்து அதற்கு ஆதரவாக எதிர்மனுதாரர், மனுதாரர் பெயருக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளார். எதிர்மனுதாரரிடம் கடன் தொகைக்கான அசல் மற்றும் வட்டித் தொகைகளை திருப்பித் தரக்கோரி பலமுறை நேரில் கேட்டும் மேற்படி பிராமிசரி நோட்டுக்குண்டான அசல் மற்றும் வட்டித் தொகைகளை திருப்பிச் செலுத்தாமல் எதிர்மனுதாரர் வீண் காலம் கடத்தி வந்துள்ளார். அதனால் மனுதாரர், தனது வழக்கறிஞர் மூலம் எதிர்மனுதாரருக்கு 20.12.2023 ம் தேதியிட்ட வழக்கறிவிப்பை அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை எதிர்மனுதாரர் கடந்த 21.12.2023 ம் தேதியன்று பெற்றுக்கொண்டு எவ்வித தொகையையும் செலுத்தவில்லை. மனுதாரரை ஏமாற்றும் நோக்கத்தோடு எதிர்மனுதாரர் தனது சொத்தை வேறு மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்து வருகிறார். அவ்வாறு செய்தால் எதிர்மனுதாரரிடமிருந்து கடன் தொகையை பெற முடியாது. எனவே மனுச்சொத்தை எதிர்மனுதாரர் அசல் வழக்கு முடியும் வரை எவ்வித வில்லங்க விவகாரங்களுக்கும் உட்படுத்தாமல் இருக்க பிணையம் அளித்து உத்தரவிடவேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மனுதாரர் நீதிமன்றத்தில் முன் ஜப்தி அல்லது முன் ஜாமீன் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுப்படி உத்தவாக வேண்டும் என்பதாகும்.

3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>:-

மனுவானது பொய்யானது புனைந்துரைக்கப்பட்டது. சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. கடந்த 20.02.2022 ம் தேதியிலோ, வேறு தேதியிலோ மனுதாரரிடம், எதிர்மனுதாரர் கடனாக எந்த தொகையையும் பெறவில்லை. மனுதாரர் யார் என்றே

எதிர்மனுதாரருக்கு தெரியாது. எதிர்மனுதாரர், மனுதாரரிடம் எவ்வித தொகையையும் கடனாக பெறாத சூழ்நிலையிலும், யார் என்றே தெரியாத சூழ்நிலையிலும் மனுதாரர், எதிர்மனுதாரரை நேரில் சந்தித்து கடன் தொகையை கேட்டதாக கூறுவது கற்பனையான ஒன்றாகும். எதிர்மனுதாரர் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வங்கியில் வீட்டு கடன் பெற்று மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக வங்கியில் மூல ஆவணங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டு வங்கியில் வைப்பீடு செய்துள்ளதால் சொத்துக்களை வேறு நபர்களுக்கு கிரையம் செய்ய இயலாது. இம்மனு தாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டு எதிர்மனுதாரருக்கு உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 6(A)ன் படி அறிவிப்பு அனுப்பப்படவில்லை. அறிவிப்பு அனுப்பாமல் இம்மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டிக்கொள்கிறார்.

4) இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி, இம்மனு அனுமதித்து உத்தரவிட வேண்டுமா? என்பதாகும்.

6) a) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதியானவர். அசல் வழக்கானது கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் எதிர்மனுதாரர் கடந்த 20.02.2022 ம் தேதி அவசர குடும்ப மற்றும் மருத்துவச் செலவுக்காக ரூ.5,50,000/-த்தை கடனாக பெற்றதாகவும் எதிர்மனுதாரர் தொகை எதுவும் செலுத்தவில்லை என்றும், எதிர்மனுதாரர் மனுச்சொத்தினை மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்து வருவதாகவும், அவ்வாறு செய்யும் பட்சத்தில் மனுதாரருக்கு தாவா தீர்ப்பு செய்யும் பட்சத்தில் கிடைக்க வேண்டிய தொகை கிடைக்காமல் போய்விடும் என்றும் எனவே மனுவை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்ய வேண்டுமென்று வாதிடப்பட்டது.

b) மனுதாரர் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.32/2024 வழக்கில் மனுதாரரால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள கடனுறுதிச் சீட்டின் பேரில் கடந்த 20.02.2022ம் தேதியன்று எதிர்மனுதாரர், மனுதாரரிடம் ரூ.5,50,000/-த்தை கடன் பெற்றதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் யார் என்றே எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றும், எதிர்மனுதாரர், மனுதாரரிடம் எவ்வித தொகையையும் கடனாக பெறவில்லை என்றும், பிராமிசரி நோட் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளாரே தவிர தான் மனுதாரரிடம் புரோ நோட்டு எழுதி கொடுத்து எந்த கடனும் பெறவில்லை என்பதை ஆவண சாட்சியம் மூலமாகவும், சாட்சிகள் மூலமாகவும் தான் நிரூபிக்க இயலும். எனவே மனுதாரரிடமிருந்து, எதிர்மனுதாரர் கடன் பெற்றுள்ளாரா? அல்லது கடனுறுதிசீட்டு சீட்டு தொகைக்கு ஆதரவாக எழுதி கொடுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து அசல் வழக்கில் மட்டுமே தீர்வு காண முடியும். இம்மனுவில் தாவா தீர்ப்பு அளிக்கப்படும் பட்சத்தில் தீர்ப்பு தொகையை பெற வேண்டி எதிர்மனுதாரரின் சொத்தினை ஜப்தி செய்ய வேண்டுமென தெரிவித்துள்ள நிலையில் அதை மறுத்து எதிர்மனுதாரர் யாதொரு சான்றாவணங்களும் தாக்கல் செய்யாத நிலையில் மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7) முடிவாக மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது. மனுச்சொத்தை பற்றுகை செய்ய வாய்தா 07.01.2025. படி கட்ட வாய்தா 2 நாட்கள்.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024-ம் வருடம் அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

P MOHANAVALLI

Digitally signed by P MOHANAVALLI
Date: 2024.10.17 18:41:56 +0530

சார்பு நீதிபதி, பொள்ளாச்சி

**<u>இரு தரப்பு சாட்சி</u>** :இல்லை

**<u>இருதரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

P MOHANAVALLI

Digitally signed by P MOHANAVALLI
Date: 2024.10.17 18:42:02 +0530

**சார்பு நீதிபதி, பொள்ளாச்சி**